முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.04.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. தீவினை என்று அறிந்தும்
தொடர்ந்து உயிர்கொலை புரிந்து
அவனியில் அசைவ வழிதொடரும்
அவலங்கள் விட்டகலவே
2. அகலவே ஆன்ம பலம் கிட்டும்
அழியாமை இலகுவாய் எட்டுமென
வகைபட அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் சோபகிருது தகர்திங்கள்
3. திங்களிலே மூவைபீர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17 ம் நாள், 30.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அத்திரி மகரிஷியும்
இங்கனமே தன்பலம் பெருக
இடரென பிறஉயிர்க்கு அழிவுதரும்
4. தருகின்ற மானிட பதருக்கு
தவதரும சித்தி கிட்டுவது எங்கனம்
தருகின்ற குணமின்றி சுயநலமுற
தனதாக்கி வாழுகின்ற மனித குணம்
5. குணமாற்றம் செய்து நன்கு
குருமார்கள் சொல்லுகின்ற
ஞானவழிகள் தனை ஏற்று
நன்மைதனை புரியும் வண்ணம்
6. வண்ணமுடன் எவ்வுயிரும் தன்னுயிராய்
வாஞ்சைபட நேசித்து சேவை
எண்ணமதில் களங்கமில்லா
எளிதாய் இனிதாய் தனைமாற்றி
7. மாற்றி உலகோர் செயல்பட
மக்களிடை குருவருள் வழி
ஆற்றல் ஆசியாக இறங்கி
அற்புதம் உலகில் நடக்கும்

8. நடக்கவே இந்தவித மாற்றம்
ஞானி அரங்கனை கொண்டு
தடையற ஆறுமுகப் பெருமான்
தக்கபடி தரணியில் நடத்திவர
9. வருகவே ஞானவான்களாக
வருமுலகில் மக்கள் மாற்றம்
குருவரங்கன் ஆசிபட சைவநெறி
குன்றா கடைபிடித்து இனிதே
10. இனிதே எல்லா உயிர்கட்கும்
இயம்பிடுவேன் கருணைகாட்டி
கனிவேலவன் துணை அனுக
கடைத்தேற்றம் யாவரும் அடைவர்
11. அடையவே அரங்கன் நெறி
அகிலம் காக்கும் சிவநெறி
தடைகளை வெல்லும் உயர்நெறி
தண்டனிட எல்லாம் சித்தியாகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—